


# தூய யூதா ததேயு வாழ்க்கை வரலாறு

தூய யூதா ததேயு, இறைமகன் இயேசுவின் ஒன்றுவிட்ட சகோதரர். திருக்குடும்பத்தின் நெருங்கிய உறவினர். சிறுவயதில் இருந்தே இயேசுவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். திருமணம் முடிந்து மனைவி மக்களுடன் இனிய இல்லற வாழ்வு நடத்தியவர். அண்ணல் இயேசுவின் அழைத்தலை ஏற்று அனைத்தையும் துறந்து அவரைப் பின் சென்றவர்.

தூய ஆவியைப் பெற்றபின் எதற்கும் பயப்படாமல் மெசபெத்தோமியா, யூதேயா, சமாரியா, பாரசீகம் ஆகிய நாடுகளில் திருமறையை பரப்பியவர். இறைமக்கள் தப்பறைகளைத் தவிர்கவும், உண்மையான நம்பிக்கையில் நிலைத்து நிற்கவும் திருமுகம் ஒன்றை இவர் எழுதினார். இறை அருளாலும், புனிதரின் அயராத உழைப்பாலும் இறை நம்பிக்கை வளர்ந்தது, ஆன்மீகப் பணி பெருகியது, புதுமைகள் பல நிகழ்ந்தன. இதைக் கண்டத் திருமறையின் விரோதிகளின் மனதில் பொறாமைத் தீ வளர்ந்தது. எனவே அவர்கள் சதித்திட்டம் தீட்டி அவரது உயிருக்கு உலை வைத்தனர். உண்மைக்கு சாட்சியாக உயிரை ஈந்தார். தூய யூதா ததேயுவுக்கும் இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் இஸ்காரியோத்துவுக்கும் உள்ள பெயர் ஒற்றுமையால் தூய யூதாவின் பக்தி நாளடைவில் மங்கத் தொடங்கியது. மறைந்து கிடந்த மாணிக்கத்தின் பக்திக் குறைவை நிறைவு செய்ய நமது ஆண்டவர் புனித பிரிஜித் அவர்களுக்குக் காட்சியளித்து ‘மக்கள் தங்களுடைய தேவைகளில் எல்லாம் தூய யூதா ததேயுவை மன்றாடட்டும். அவர் தம் பெயருக்கேற்ற உதவி புரிவார்’ என்று கூறினார். கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலராகவும், நம்பிக்கை இழந்தவர்களுக்கு நம்பிக்கை அளிப்பவராகவும், இயலாதவற்றை இயலச் செய்பவராகவும், திரு அவை இவரை

மகிமைப்படுத்தியுள்ளது. மக்களும் இதை நன்கு உணர்ந்தனர். மீண்டும் இவரது பக்தி முயற்சி மக்கள் மத்தியில் சிறப்பு பெறத் தொடங்கியது.

இத்தகைய வல்லமை வாய்ந்த புனிதரின் திருவிழாவைத் தாய் திரு அவை ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் 28ம் தேதி கொண்டாடுகிறது. தங்களின் தேவைகளில் உண்மையான, உறுதியான விசுவாசத்தோடும் ஆழ்ந்த நம்பிக்கையுடனும் தூய யூதா ததேயுவை நம்பி மன்றாடி வந்தால் நிச்சயம் அவர் நமக்காக இறைவனிடம் பரிந்து பேசி உதவி செய்வார்.

## தொடக்கப் பாடல்: (எழுந்து நிற்கவும்)

புவியில் புதுமை புரிபவரே புனித யூதா ததேயுவே
புவியோர் எம்மைப் புரந்திடுவோர் புதிய வாழ்வும் தந்திடுவீர்

திருமறை போற்றும் போதகரே திக்கற்றோரின் காவலரே
இறைவன் இயேசுவின் சாயலையே நெஞ்சில் தரித்துக் கொண்டவரே.

இயேசுவின் அரசை வளர்த்திடவே எழுந்த பெரும் அப்போஸ்தலரே
இயேசுவின் நெருங்கிய உறவினரே எம் குறை தீர்த்தருள் புரிவீரே.

## தொடக்க செபம்: (முழந்தாள்படியிடவும்)

அப : தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே...
மக் : ஆமென்.

மக் : புனித யூதா ததேயுவே! மாட்சிமை மிக்கத் திருத்தூதரே. இறை மகன் இயேசுவின் பிரமாணிக்கமுள்ள ஊழியரும், நண்பருமானவரே. புனிதத் தாய் திரு அவை உம்மைக் கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலராக அறிவித்துள்ளது. எங்களது அவசரங்களிலும், இக்கட்டுகளிலும், தேவைகளிலும் எங்களுக்காக வேண்டிக் கொள்ளும். இறுதி நாளில் எங்களுக்கு ஆறுதலையும் விண்ணகப் பேரின்பத்தை யும் பெற்றுத் தர எங்களுக்காக இறைவனை மன்றாடும். நாங்கள் வேண்டும் மன்றாட்டுக்களை எங்களுக்கு அடைந்து தந்தருளும். இதனால் நாங்கள் இறைவனின் மாட்சியையும், பாவிகளான எங்கள் மேல் அவர் கொண்டுள்ள பரிவையும் கண்டு அவரை என்றென்றும் புகழ்ந்து பாடுவோமாக. ஆமென்.

அப : கைவிடப்பட்டவர்களின் பாதுகாவரான தூய யூதா ததேயு திருத்ததூதரே...
மக் : உம்மை நாடி வரும் எங்களுக்காக இறை மகன் இயேசுவை மன்றாடும்.
அப : இயலாதவற்றை இயலச் செய்பவரான தூய யூதா ததேயு திருத்ததூதரே...
மக் : உம்மை நாடி வரும் எங்களுக்காக இறை மகன் இயேசுவை மன்றாடும்.
அப : நம்பிக்கை இழந்தவர்களின் நம்பிக்கையான தூய யூதா ததேயு திருத்ததூதரே...
மக் : உம்மை நாடி வரும் எங்களுக்காக இறை மகன் இயேசுவை மன்றாடும்.

## விண்ணப்பங்கள்:

அப : சகோதரரே, தூய யூதா ததேயுவின் வல்லமையுள்ள பரிந்துரையில் நம்பிக்கை வைத்து, அவர் வழியாக நாம் இறைவனை மன்றாடுவோம்.

அப : பிறப்பிலும், வாழ்விலும், இறப்பிலும் இயேசுவோடு நெருங்கிய உறவு கொண்டு விளங்கிய தூய யூதா ததேயுவைப் போல் நாங்களும் இயேசுவோடு இணைந்து வாழும்படியாக...

மக் : தூய யூதா ததேயு வழியாக ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

அப : ஆன்ம தாகத்தால் அயராது உழைத்து கிறிஸ்துவை அறியாதோர் அவரை அறிய நம்பிக்கை ஒளியை ஏற்றிய தூய யூதா ததேயுவைப் போல நாங்களும் ஆன்மீக மீட்பில் அக்கறை உள்ளவர்களாகவும் நம்பிக்கை வாழ்வில் கிறிஸ்துவை அறிய செய்கிறவர்களாகவும் விளங்கும் படியாக...

மக் : தூய யூதா ததேயு வழியாக ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

அப : இறை மகனின் விண்ணேற்றத்திற்குப் பின் அவரது ஆணைப்படியே ஏதெஸ்ஸா நாட்டிற்குச் சென்று, தொழுநோயால் அவதியுற்ற அந்த நாட்டு அரசனுக்கு அற்புதச் சுகம் அளித்ததைப் போல எங்கள் ஆன்ம உடல் நோய்கள் அனைத்திலிருந்தும் பாதுகாக்கப்படும் படியாக...

மக் : தூய யூதா ததேயு வழியாக ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

அப : நம்பிக்கை இழந்தவர்களின் நம்பிக்கையான தூய யூதா ததேயுவின் பரிந்துரையால் திரு அவை செழிப்புற்று ஓங்கவும், எங்கள் குடும்பங்களில் நீடிய சமாதானமும், நல்ல உடல் சுகமும் நிலவி, தேவ ஆசீர் பெருகும்படியாக...

மக் : தூய யூதா ததேயு வழியாக ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

அப : திரு மறைக்காக உயிர் துறந்த தூய யூதா ததேயுவைப் போல குருக்களும் இறைமக்களும் நம்பிக்கையில் ஆழ்ந்த பற்றும் ஆர்வமும் கொண்ட வாழ்க்கை நடத்தி, நிலை வாழ்வைப் பெறத் தகுதி பெறும்படியாக...

மக் : தூய யூதா ததேயு வழியாக ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

அப : இந்த நவநாள் பக்தர்கள் அனைவரும் தாங்கள் விரும்பிக் கேட்பவை எல்லாம் விரைவில் பெற்று மகிழும்படியாக...

மக் : தூய யூதா ததேயு வழியாக ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

அப : செபிப்போமாக! எல்லா வல்லமையும் இரக்கமுமுள்ள மீட்பரான ஆண்டவரே! உமது அளவில்லாத அன்புக்குரியவரும் உமது அவதாரத்தில் நெருங்கிய உறவினரும், திருத்தூதருமான தூய யூதா ததேயு வழியாக நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்களை எல்லாம் தயவாய் தந்தருளும்படி எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

மக் : ஆமென்

## நன்றியறிதல்:

அப : திருத்தூதரும் மறை சாட்சியுமான தூய யூதா ததேயுவின் பரிந்துரையால் திரு அவைக்கு நீர் செய்துள்ள எல்லா நன்மை உபகாரங்களுக்காகவும்...

மக் : தூய யூதா ததேயு வழியாக ஆண்டவரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

அப : கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான தூய யூதா ததேயுவின் பரிந்துரையால் பாவிகள் மனந்திரும்பவும், கடும் நோயாளிகள் நலம் பெறவும், நீர் செய்த எல்லா உதவிகளுக்காகவும்...

மக் : தூய யூதா ததேயு வழியாக ஆண்டவரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

அப : உம் திருமுன் கூடியிருக்கும் நாங்கள் அனைவரும் உமது திருத்தூதர் தூய யூதா ததேயுவின் பரிந்துரையால் பெற்றுக் கொண்ட எண்ணற்ற நன்மைகளுக்காக...

மக் : தூய யூதா ததேயு வழியாக ஆண்டவரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

அப : தூய யூதா ததேயுவின் பரிந்துரையால் இறை நம்பிக்கை வளர்ச்சி அடைந்து, திரு அவை பாதுகாக்கப்பட்டு, திருமறையைச் செழிப்புறச் செய்வதற்காகவும், எமது குடும்பங்களில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவி, இறை ஆசீர் பெருகச் செய்ததற்காகவும்...

மக் : தூய யூதா ததேயு வழியாக ஆண்டவரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

அப : நாம் தனிப்பட்ட முறையில் அடைந்த நன்மைகளுக்காக மௌனமாய் நன்றி செலுத்துவோம்.

## தூய யூதா ததேயு நவநாள் செபம்:

அப : தூய யூதா ததேயுவின் வல்லமையுள்ள பரிந்துரையில் நம்பிக்கை வைத்து அவர் புகழைப் பாடுவோமாக. அவற்றை அவருக்கு அளித்த இறைவனுக்கு நன்றி செலுத்துவோமாக. நமது அனைத்துத் தேவைகளையும் தவறாமல் பெற்றுத் தர அவரை நோக்கிக் கெஞ்சி மன்றாடுவோமாக.

மக் : மாட்சிமை மிக்கத் திருத்தூதரும் மறைசாட்சியுமான தூய யூதா ததேயு, எங்கள் ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் நெருங்கிய உறவினரே, புண்ணியங்கள் மின்னித்துலங்கும் தூயவரே, புதுமை வரங்களில் சிறந்தவரே, தம்மைத் தேடி வந்தவர்களை தப்பாமல் ஆதரிக்கும் இரக்க உள்ளம் கொண்டவரே, உம்மை நாங்கள் வாழ்த்துகிறோம். இந்த அற்புத வரங்களை உமக்களித்த அன்பு இறைவனுக்கு ஆராதனை செலுத்துகிறோம். எங்கள் இதயப் பூர்வமான நன்றி செலுத்துகிறோம். எங்களுக்குத் தேவையான ஆன்ம உடல் நலன்களை எல்லாம் அடைந்து தந்தருள உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம். சிறப்பாக, இப்போது எங்களுக்கு மிகவும் அவசியமான இந்த வரங்களைப் பெற்றுத்தாரும்.

**(உங்கள் மன்றாட்டுக்களை இப்போது மௌனமாக நினைவு கூறவும்)**

மக் : அன்பு செய்யப்படவும், உள்ளப் பண்பாடு உடையவரும், இறை புகழை பாடுபவருமான இரக்க உள்ளம் தூய யூதா ததேயுவே! உமது வல்லமையில் எங்கள் நம்பிக்கை வீண் போகவிடாதேயும். யூதாஸ் இஸ்காரியோத்தின் பெயர் ஒற்றுமையால் உமக்கு நேர்ந்த பக்திக் குறையைக் பரிகரித்து, வகையின்றி வாடுவோருக்கு வல்லமையுடன் உதவி புரியும் அரிய வரத்தை இறைவன் உமக்கு அளித்திருக்கிறார் என்பதை நினைவு கூர்ந்தருளும். இந்தப் பெரிய அரிய வரத்திற்காக நாங்களும் உம்முடன் சேர்ந்து இறைவனின் புகழைப் பாடத் துணை புரியும். அவருக்கு நன்றி செலுத்தவும் அருள் தாரும். நீர் எங்களுக்குச் செய்கின்ற இந்தப் பேருதவிக்காக எங்கள் வாழ்நாள் எல்லாம் நாங்கள் உமக்கு நன்றி உள்ளவர்களாக இருப்போம். உமது வல்லமையுள்ள மன்றாட்டை மக்களிடையில் அறியச் செய்வோம். பலர் அறியாதப் புனிதரே! சிறப்பு இயல்புகள் பல படைத்தவரே! பலன் தரும் உமது பக்தி உலகெங்கும் பரவ எங்களால் இயன்றவைற்றைச் செய்வோம் என்றும் உறுதியாய் வாக்களிக்கிறோம். ஆமென்.

## தூய யூதா ததேயு புகழ்மாலை:

அப : ஆண்டவரே இரக்கமாயிரும்...
மக் : ஆண்டவரே இரக்கமாயிரும்.
அப : கிறிஸ்துவே இரக்கமாயிரும்...
மக் : கிறிஸ்துவே இரக்கமாயிரும்.
அப : ஆண்டவரே இரக்கமாயிரும்...
மக் : ஆண்டவரே இரக்கமாயிரும்.
அப : கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.
மக் : கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கனிவாய்க் கேட்டருளும்.

அப : விண்ணகத் தந்தையாகிய இறைவா...
மக் : எங்கள் மேல் இரக்கமாயிரும்.
அப : உலகை மீட்ட திருமகனாகிய இறைவா...
மக் : எங்கள் மேல் இரக்கமாயிரும்.
அப : தூய ஆவியாகிய இறைவா...
மக் : எங்கள் மேல் இரக்கமாயிரும்.
அப : மூவொரு கடவுளாகிய இறைவா...
மக் : எங்கள் மேல் இரக்கமாயிரும்.

**(கீழுள்ள புகழுக்குப் பதிலுரையாக 'எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்' என்று சொல்லவும்)**

அப : தூய மரியாவே...
அப : தூய யூதா ததேயுவே...
அப : திருக்குடும்பத்தின் நெருங்கிய உறவினரே...
அப : மாட்சிமை மிக்கத் திருத்தூதரே...
அப : தெய்வீக ஆசிரியரின் உத்தமமாணவரே...

அப : தேவ பராமரிப்புகள் அமைந்த யாத்திரிகரே...
அப : இறை நம்பிக்கை சாட்சியே...
அப : தரித்திரத்தை நேசித்தவரே...
அப : தாழ்ச்சிக்கும் பொறுமைக்கும் முன்மாதிரியே...
அப : தேவ அன்பின் தீபமே...
அப : தூய்மையான விண்மீனே...
அப : இறை அருளின் திருப்பேழையே...
அப : பேய்களை நடுநடுங்கச் செய்கிறவரே...
அப : திரு அவையின் தூணே...
அப : துன்புறுவோரின் ஆறுதலே...
அப : பாவிகளுக்காகப் பரிந்து பேசுபவரே...
அப : திக்கற்றவர்களின் சகாயமே...
அப : திகைக்கின்றவர்களின் பிரகாசமே...
அப : நம்பிக்கை இழந்தவர்களின் ஊன்றுகோலே...
அப : வியத்தகு அற்புதங்களைச் செய்கிறவரே...
அப : தேவ வரங்களை வழங்குவதில் மிகவும் பேறு பெற்றவரே...
அப : உம்மை மன்றாடுவோர்க்குத் தப்பாமல் உதவி புரிபவரே...
அப : உம்மிடம் நம்பிக்கை வைப்பவர்களுக்குத் தவறாமல் உதவி செய்கிறவரே...
அப : அவசரமுள்ளவர்களுக்குத் தாமாகவே வந்து உதவும் பேருபகாரியே...
அப : இக்கட்டான வேளைகளில் உடன் உதவி புரிய வல்லமை வாய்ந்தவரே...
அப : திக்கற்றவர்களுக்காகப் பரிந்து பேசுவதில் பேறு பெற்றவரே...
அப : உம்மை வணங்குவோர்க்கு அன்புள்ள மெய்க்காப்பாளரே...
அப : எங்கள் சிறப்புப் பாதுகாவலரே...

அப : உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியான இயேசுவே...
மக் : எங்கள் பாவங்களைப் மன்னித்தருளும்.
அப : உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியான இயேசுவே...
மக் : எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.
அப : உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியான இயேசுவே...
மக் : எங்கள் மேல் இரக்கமாயிரும்.

அப : செபிப்போமாக! எல்லா வல்லமையும் இரக்கமும் உள்ள எங்கள் மீட்பரான ஆண்டவரே, உமது அளவில்லாத அன்புக்குரியவரும், உமது மனித அவதாரத்தில் நெருங்கிய உறவினரும், உமது திருத்தூதருமான தூய யூதா ததேயு வழியாக நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்களை எல்லாம் தயவாய்த் தந்தருளும்படி உம்மை மன்றாடுகிறோம்.
மக் : ஆமென்.

## நோயாளிகளை ஆசீர்வதித்தல்:

அப : செபிப்போமாக.

மக் : ஆண்டவரே உடல் நோயால் வருந்தும் உமது ஊழியரைப் பாரும். நீர் உண்டாக்கிய ஆன்மாக்களுக்கு ஆறுதல் தாரும். நாங்கள் துன்பங்களினால் தூய்மை அடைந்து உமது இரக்கத்தினால் விரைவில் குணமடையும்படி அருள் புரிவீராக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

## இறுதி செபம்:

அப : இயேசுவின் மதுரமான திரு இதயமானது...

மக் : முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் அன்பு செய்யப்படுவதாக.

அப : இயேசுவின் மதுரமான திரு இதயமானது...

மக் : இன்றும் என்றும் எக்காலமும் புகழ்ந்து மகிமைப்படுத்தப்படுவதாக.

அப : இயேசுவின் மதுரமான திரு இதயமானது...

மக் : என்றென்றும் ஆராதிக்கப்படுவதாக.

அப : அன்னை மரியாவின் மாசற்ற இதயமானது...

மக் : என்றென்றும் வணங்கப்படுவதாக.

அப : திருத்தூதரான தூய யூதா ததேயு...

மக் : என்றென்றும் வாழ்த்தப்படுவாராக.

அப : திருத்தூதரான தூய யூதா ததேயுவே...

மக் : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## இறுதி ஆசீர்:

அப : **(வலக்கரத்தை நீட்டி)** ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்களைப் பாதுகாக்க உங்கள் நடுவிலும், உங்களைக் காப்பாற்ற உங்களுக்குள்ளும், உங்களுக்குக் காவலாயிருக்க உங்களுக்குப் பின்னும், உங்களை வழிநடத்த உங்களுக்கு முன்னும் உங்களை ஆசீர்வதிக்க உங்கள் மேலும் இருப்பாராக. எல்லா வல்ல இறைவன், தந்தை, மகன், தூய ஆவியார் உங்களுக்கு ஆசி வழங்குவாராக!

மக் : ஆமென்.

## இறுதிப் பாடல் 1: (எழுந்து நிற்கவும்)

**(மெட்டு : அலைகடல் ஒளிர் மீனே)**

புனிதராம் யூதாவே ~ உம்மை புகழ்ந்து கொண்டாடும் எம்மை
இனிது காத்தாண்டிட ~ வேந்தன் இயேசுவை வேண்டிடுவீர்!

துன்பமாம் கடல் நடுவே ~ வருத்தித் துடித்துத் துயர்படுவோர்
இன்பவான் துறைசேரத் ~ துணையாய் இலக்குமப்போஸ்தலரே

தற்பரன் உமக்களித்த ~ அரிய தனிப்பெரும் சலுகையினால்
பற்பல அற்புதங்கள் ~ புரியும் பண்பினை என் சொல்வோம்

திருமறை செழித்திடவே ~ உயிரைத் தியாகம் செய்த உடலின்
குருதி எல்லாம் சொரிந்த ~ வீரக் குலமணியே வாழி!

நம்பி வந்தோர்களை நீர் ~ எந்த நாளும் கைவிட்டதில்லை
செம்மையாய் ஆதரித்து ~ அன்பாய்த் தீர்த்திடுவீர் தொல்லை

இயேசுவின் நற்செய்தி ~ கூறி சோர்வின்றி பணியாற்றி
மசுறாவின் சுடர் போல் ~ விளங்கும் மாதவனே வாழி!

## இறுதிப் பாடல் 2: (எழுந்து நிற்கவும்)

தேவ வரங்கள் பொழியும் தூய ததேயுவே
தேவையில் வந்து உதவும் அன்புத் தீபமே
பரமன் இயேசு வழியில் எம்மை நடத்திட
இறைவன் தந்த சொந்தம் என்று நினைக்கிறோம்

உண்மை நெறியும் உயர்ந்த மனதும் வேண்டுமே
நிறைந்த வாழ்வும் வழியும் என்னில் வேண்டுமே
கல்லும் முள்ளும் எரிந்து போக வேண்டுமே
கருணை வெள்ளம் என்னில் கசிய வேண்டுமே

துன்பம் போக்கும் துயரம் நீக்கும் தூயனே
இன்பம் பெருகி இருளில் ஒளிரும் நேயனே
கன்றி வந்த கண்கள் உம்மை பாருமே
கருணை இறைவன் பாதம் எம்மை சேருமே